SURESH' IAS ACADEMY



# 11.06.2026 செய்திகள்

## உலகின் சிறந்த உணவு நகரங்கள் பட்டியல் : பெங்களூருவுக்கு 13வது இடம்

» டாப் 5

- பெரு நாட்டின் லிமா நகரம்; தாய்லாந்தின் டாங்காக்; மெக்சிகோவின் மெக்சிகோ சிட்டி; லண்டன்; பார்சிலோனா
- உலகின் சிறந்த உணவு நகரங்கள் 2026 பட்டியலில் இடம் பெற்று முத்திரை பதித்துள்ளது. தென்னிந்தியாவைச் சேர்ந்த பெங்களூரு நகரம் உலக அளவில் 13வது இடத்தைப் பிடித்துள்ளது.
- பென்னே தோசை, டோன்னே பிரியாணி மற்றும் கோகம் கலந்த காக்டெய்ல் ஆகிய இவை அனைத்தும் பெங்களூருவின் உணவு மற்றும் பான கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகும். இதனைத் தவறவிடவே முடியாது. அதற்கு கிடைத்துள்ள உலகளாவிய அங்கீகாரமே இதற்குச் சான்றாக அமைகிறது. ஆம், இந்தியாவின் சிலிக்கான பள்ளத்தாக்கு.
- 2026 ஆம் ஆண்டின் உலகின் சிறந்த 20 உணவு நகரங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. பாரம்பரிய டிபன் அறைகள் மற்றும் ராணுவ ஓட்டல்கள் முதல் காலை உணவு கபேக்கள் மற்றும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பார் கலாச்சாரம் வரை, பெங்களூருவில் உணவுப் பிரியர்களுக்கான அனைத்தும் உள்ளன.
- இந்தத் தரவரிசையானது, உலகெங்கிலும் உள்ள 2,400-க்கும் மேற்பட்ட மக்களிடம் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவர்களிடம் தரம், மலிவு விலை மற்றும் பன்முகத்தன்மை போன்ற காரணிகளின் அடிப்படையில் தங்கள் உள்ளூர் உணவு வகைகளை மதிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெங்களூருவில் 82 சதவீதம் பேர் அதன் உணவு வகைகளை நல்லது அல்லது அற்புதமானது என்று மதிப்பிட்டனர்.

## 3 சின்னங்கள்

- 2026 பிஃபா உலகக் கோப்பை கால்பந்து தொடரை அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய மூன்று நாடுகள் இணைந்து நடத்துவதால் உலகக் கோப்பையின் அதிகாரப்பூர்வ சின்னங்களாக மூன்று உருவங்கள் இடம்பெற்றுள்ள மேப்பிள் என்ற மூஸ் (கனடா), ஸாயு என்ற ஜாகுவார் (மெக்சிகோ), கிளட்ச் என்ற வழுக்கைத் தலைக் கழுகு (அமெரிக்கா) ஆகியவை சின்னங்காள உள்ளன.

## கால்பந்து திருவிழா : களத்துக்கு அப்பால் ......

- 1930-ல் உருகுவே நாட்டில் நடைபெற்ற முதல் ஃபிஃபா கால்பந்து உலகக் கோப்பைப் போட்டியில் வெறும் 13 அணிகள் மட்டுமே பங்கேற்றன. அதிலிருந்து 52 ஆண்டுகளுக்கு பிறகு, 1982இல் இத்தாலியில் நடைபெற்ற உலகக் கோப்பைத் தொடரில்தான் அந்த எண்ணிக்கை 24 ஆக உயர்த்தப்பட்டது.
- 1988இல் ஃபிரான்ஸில் நடைபெற்ற உலகக் கோப்பைத் தொடரின்போது 32 அணிகள் களமிறங்கின. இத்தொடரில் விளையாடிய குரோஷியா, அறிமுக உலகக் கோப்பையிலேயே 3 ஆவது இடத்தைப் பிடித்து ஆச்சரியப்படுத்தியது. அதில் இருந்து 32 அணிகள் பங்கேற்பது வழக்கமாக இருந்த நிலையில் 28 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது 48 அணிகள் களம் காண்கின்றன.

» 8 வெற்றியாளர்கள்

- 2026இல் நடைபெற இருப்பது 23ஆவது ஃபிஃபா கால்பந்து உலகக் கோப்பை. உலகின் பல்வேறு நாடுகள் இத்தொடருக்குத் தேர்ச்சி பெற்று விளையாடி இருந்தாலும் எட்டு அணிகள் மட்டுமே இதுவரை கோப்பையை வென்றுள்ளன.

- பிரேசில் (5), ஜெர்மனி (4), இத்தாலி (4), அர்ஜென்டினா (3), ஃபிரான்ஸ் (2), உருகுவே (2), இங்கிலாந்து (1), ஸ்பெயின் (1).

» ஆயிரம் களம்

- இம்முறை ஜப்பான் – துனிசியா அணிகள் மோதும் குரூப் எஃப் போட்டி, உலகக் கோப்பை வரலாற்றில் 1,000 ஆவது ஆட்டமாகப் பதிவாக உள்ளது.
- இந்த மைல்கல்லை எட்ட உலகக் கோப்பைக்கு 96 ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளது. ஆனால், 104 போட்டிகள் கொண்ட புதிய உலகக் கோப்பை வடிவம் தொடர்ந்தால், இன்னும் 10 தொடர்களில் அதாவது ஏறக்குறைய 40 ஆண்டுகளில் உலகக் கோப்பை வரலாற்றின் 2,000 ஆவது போட்டியையும் காணலாம்.

» ஆசிய நாடுகள்

- தென் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளே ஆதிக்கம் செலுத்திவரும் கால்பந்து உலகக் கோப்பையில் ஜப்பான், தென் கொரியா, ஈரான், சௌதி அரேபியா ஆகிய ஆசிய நாடுகளும் தொடர்ந்து பங்கேற்றுத் தடம் பதித்துள்ளன. ஆனால், உலகக் கோப்பை வரலாற்றில் களமிறங்கிய முதல் ஆசிய அணி டச்சு கிழக்கு இந்தியத் தீவுகள். 1938 ஆம் ஆண்டு ஃபிரான்ஸில் நடைபெற்ற உலகக் கோப்பையில் அறிமுகமான அந்த அணி, தற்போது இந்தோனேசியக் கால்பந்து அணியாக அடையாளம் காணப்படுகிறது.
- அப்போது டச்சு காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்ததால், நெதர்லாந்தின் ஆரஞ்சு நிற உடையுடன் களமிறங்கிய அந்த அணி, அதன் பிறகு இதுவரை உலகக் கோப்பை இறுதிச் சுற்றுக்குத் தகுதிபெறவில்லை. இருப்பினும், உலகக் கோப்பையில் விளையாடிய முதல் ஆசிய அணி என்கிற பெருமையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

» அவதார் ஆட்டம்

- 2026 ஃபிஃபா கால்பந்து உலகக் கோப்பையில் இடம்பிடித்துள்ள 1,248 வீரர்களில், 357 பேர் ஏற்கனவே உலகக் கோப்பையில் விளையாடிய அனுபவம் பெற்றவர்கள்.
- மீதமுள்ள 891 பேர், உலகக் கோப்பைத் தொடரில் முதல் முறையாகக் களமிறங்க உள்ளனர். அதுமட்டுமல்லாமல் அத்தனை வீரர்களுக்கும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் உயிரோட்டமிக்க 3டி டிஜிட்டல் அவதார்களை உருவாக்க ஃபிஃபா திட்டமிட்டுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள கால்பந்து ரசிகர்கள் போட்டி நிகழ்வுகளைப் பல்வேறு கோணங்களில் காணவும், வீரர்களின் அசைவுகளை முப்பரிமாண வடிவில் காட்சிப்படுத்தவும், புதிய டிஜிட்டில் அனுபவங்களை வழங்கவும் இந்த அவதார்களைப் பயன்படுத்த இருப்பதாக ஃபிஃபா தெரிவித்துள்ளது.

» பாகிஸ்தான் பந்து

- 1970 முதல் ஃபிஃபா உலகக் கோப்பைக்கான அதிகாரப்பூர்வப் போட்டிப் பந்துகளை அடிடாஸ் நிறுவனம் வடிவமைத்து வழங்குகிறது. கடந்த சில கால்பந்து உலகக் கோப்பைத் தொடர்களில் பயன்படுத்தப்பட்ட கால்பந்துகள் பாகிஸ்தானின் சியால்கோட் நகரில் தயாரிக்கப்பட்டவை. உலகின் முன்னணி கால்பந்து உற்பத்தி மையங்களில் ஒன்றாக சியால்கோட் அறியப்படுகிறது.

» தண்ணீர்... தண்ணீர்....

- 1994 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற உலகக் கோப்பையின்போது கடுமையான வெப்பமும் ஈரப்பதமும் நிலவியபோதும், வீரர்களுக்குத் தண்ணீர் இடைவேளை வழங்கப்படவில்லை.
- இது பெரும் சர்ச்சையாக வெடித்தது. ஆனால் 2026 உலகக் கோப்பையில், வீரர்களின் உடல்நலனைக் கருத்தில் கொண்டு, போட்டியின் ஒவ்வொரு பாதி ஆட்டத்திலும் மூன்று நிமிடக் கட்டாயத் தண்ணீர் இடைவேளை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

» பெண் நடுவர்கள்

- இந்த உலகக் கோப்பையில் அமெரிக்காவின் டோரி பென்சோ, மெக்சிகோவின் சத்தியா இட்ஸெல் கார்சியா ஆகியோர் பெண் நடுவர்களாகப் பணியாற்ற உள்ளனர். இவர்களைத் தவிர மூன்று உதவி நடுவர்கள், ஒரு காணொளி உதவி நடுவர் (VAR) என மொத்தம் ஆறு பெண்கள் ஃபிஃபாவின் சார்பாக அதிகாரப்பூர்வமாக பணியாற்ற உள்ளனர்.
- 2022 உலகக் கோப்பையில் முதல் முறையாகப் பெண் நடுவர்கள் களமிறங்கிய நிலையில், தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆடவர் உலகக் கோப்பை போட்டிகளில் அவர்களின் பங்கேற்பு தொடர்கிறது.


| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |